**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590

**ஆணை நாள்: 30.09.2019 (பிற்பகல்)**
**மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சிவகங்கை மாவட்டம்.**

**முன்னிலை**

**திரு ச.செல்வராஜ், எம்.ஏ., பி.எட்.,**
**மாநில தகவல் ஆணையர்**
**•••••••••**

**வழக்கு எண்.SA 9943/E/2018**

திரு ரா.காளீஸ்வரன் ... மேல்முறையீட்டாளர்

Vs.

பொதுத் தகவல் அலுவலர்,
அரசு மருத்துவமனை,
தேவகோட்டை,
சிவகங்கை மாவட்டம். ... பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 20.08.2018 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 15.10.2018 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 26.12.2018 |

******

**ஆணை**

இன்று (30.09.2019) பிற்பகலில் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மேல்முறையீட்டாளர் திரு ரா.காளீஸ்வரன் ஆஜரானார். பொது

அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர், மரு. ரா.சிவதாணு, உதவி மருத்துவர், அரசு தலைமை மருத்துவமனை, தேவகோட்டை, சிவகங்கை மாவட்டம் ஆஜரானார்.

2. மேல்முறையீட்டாளர் 20.08.2018 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் திரு இராமச்சந்திரன் என்பவர் விபத்தில் சிக்கி காயமடைந்து தேவகோட்டை அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு இறந்துவிட்டதாகவும், 25.05.1992 அன்று பிரேதப் பரிசோதனை செய்யப்பட்டதாகவும் தெரிவித்து, மேற்படி இராமச்சந்திரன் பிரேதம் பரிசோதனைக்குப்பின் யாரிடம் ஒப்படைக்கப்பட்டது, பிரேதத்தைப் பெற்றுச் சென்றவர் பெயர் என்ன, பிரேதத்தைப் பெற்றுச் சென்றவருக்கும், இராமச்சந்திரனுக்கும் என்ன உறவுமுறை, பிரேதத்தைப் பெற்றுச் சென்றவரின் இடது கைப் பெருவிரல் ரேகையும், கையொப்பமும் செய்துள்ள தாளின் நகல், இராமச்சந்திரன் பெயர் பதிவுள்ள தேவகோட்டை தாலுகா அரசு மதுருத்துவமனைப் பிரேதப் பரிசோதனை பதிவேடு/கோப்பு/அறிக்கை நகல், அவரது இறப்புப் பதிவு உள்ள நகராட்சி இறப்புப் பதிவேடு நகல், காவல் ஆய்வாளர், தேவகோட்டை அவர்களின் 25.05.1992 தேதியிட்ட கடித நகல் என 7 இனங்களில் தகவல் கோரி, பொதுத் தகவல் அலுவலர், சிவகங்கை மாவட்டத் தலைமை மருத்துவமனை, சிவகங்கை என விலாசமிட்டுத் தாக்கல் செய்துள்ளார்.

3. மேல்முறையீட்டாளரின் மனுவானது 31.08.2018 தேதியிட்ட கடிதம் வாயிலாகப் பொதுத் தகவல் அலுவலர், அரசு மருத்துவமனை, தேவகோட்டை, சிவகங்கை மாவட்டம் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேல்முறையீட்டாளருக்கு 20.09.2018 தேதியிட்ட கடிதம் வாயிலாகப் பொதுத் தகவல் அலுவலரால் தகவல் வழங்கப்பட்டுள்ளது. பொதுத் தகவல் அலுவலரால் தான் கோரிய தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை வழங்க உத்திரவிடுமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 15.10.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன்கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர், இணை இயக்குநர் நலப் பணிகள் அலுவலகம், சிவகங்கை அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டாளருக்கு 09.11.2018 தேதியிட்ட கடிதம் வாயிலாக மேல்முறையீட்டு அலுவலரால் தகவல் வழங்கப்பட்டள்ளது. பொது அதிகார அமைப்பினரால் முழுமையான தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை வழங்க உத்திரவிடுமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 26.12.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன்கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (30.09.2019) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் ஆஜராகி, தான் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவிற்குப் பொதுத் தகவல் அலுவலரால் தகவல் வழங்கப்படாததால், சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவும், சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் ஆணையத்திற்கு இரண்டாம் மேல்முறையீட்டு மனுவும் தாக்கல் செய்துள்ளதாகவும், இதுநாள்வரைப் பொது அதிகார அமைப்பினரால் முழுமையான

தகவல் தனக்கு வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை முழுமையாக வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடுமாறும் தனது வாதுரையை ஆணையத்தின் முன்பு எடுத்துரைத்தார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

5. இன்றைய விசாரணையில் பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மேல்முறையீட்டாளருக்கு 09.11.2018 தேதியிட்ட கடிதம் வாயிலாகத் தகவல் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து உரிய ஆவணங்களை ஆணையத்தின் முன்பு தாக்கல் செய்தார். இதனை ஆணையம் பதிவு செய்கின்றது.

6. பொதுத் தகவல் அலுவலரால் மேல்முறையீட்டாளருக்கு வழங்கப்பட்டுள்ள தகவலைப் பரிசீலனை செய்கையில், மேல்முறையீட்டாளருக்கு முழுமையான தகவல் வழங்கப்படவில்லையென்பது தெரிய வருகிறது. இதனை ஆணையம் பதிவு செய்து, விசாரணையின் முடிவில் கீழ்க்கண்ட உத்திரவு பிறப்பிக்கப்படுகின்றது:

1. **இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் மேல்முறையீட்டாளருக்கு அறிவிப்புக் கடிதமொன்றை அனுப்பி, அலுவலக வேலை நாளில், வேலை நேரத்தில், இதர அலுவலகப் பணிகளுக்குக் குந்தகம் ஏற்படாவண்ணம் அலுவலகம் வரவழைத்து, மேல்முறையீட்டாளர் 20.08.2018 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள இனம் 1, 2, 3, 4 மற்றும் 5 ஆகியவற்றிற்கு உரிய தகவல் தொடர்பான ஆவணங்கள் தங்களது அலுவலகத்தில் இருந்தால் மேற்படி ஆவணங்களைத் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 2(j)-ன்படி மேல்முறையீட்டாளரின் ஆய்வுக்கு ஆஜர்படுத்தி, ஆய்வு செய்தபின்னர் தனக்குத் தேவைப்படும் தகவலைக் குறிப்பிட்டுக் கோரும்பட்சத்தில், அதனை ஒளி நகலெடுத்து, சான்றொப்பமிட்டு, தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 7(6)-ன்கீழ் கட்டணம் ஏதுமின்றி வழங்கி, அதனை அவர் பெற்று ஏற்பளிப்பு செய்த விபரத்தை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 30 தினங்களுக்குள் ஆணையத்திற்குச் சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடப்படுகின்றது.**

2. **மேற்படி ஆவணம் தங்களது அலுவலகத்தில் இல்லையென்றால் அது குறித்துப் பிரமாண வாக்குப்பத்திரம் (Sworn Affidavit) ஒன்றை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 30 தினங்களுக்குள் ஆணையத்திற்குச் சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடப்படுகின்றது.**

3. **மேல்முறையீட்டாளர் 20.08.2018 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள இனம் 6-ற்குரிய தகவலை தேவகோட்டை நகராட்சியிடமிருந்து பெற்றுக்**

**கொள்ளுமாறும், இனம் 7-ற்குரிய தகவலை காவல் துறையை அணுகிப் பெற்றுக் கொள்ளுமாறும் மேல்முறையீட்டாளருக்கு அறிவுறுத்தப்படுகின்றது.**

**ஒம்/- ச.செல்வராஜ்**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண்.SA 9943/E/2018**

பெறுநர்

**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்,
அரசு மருத்துவமனை,
தேவகோட்டை,
சிவகங்கை மாவட்டம்.

**மனுதாரர்**

திரு ரா.காளீஸ்வரன்,
1-3/22A, நடராஜன் வீதி,
கோ.அழகாபுரி,
கோட்டையூர் (அஞ்சல்),
காரைக்குடி வட்டம்,
சிவகங்கை மாவட்டம் - 630 106.

Copy to: Judgement File.
04/10/19